# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : DW2 | Date : 25.02.2025
Case No. : **O.S.** 7/2019 | Nationality : Indian
Name : தயாளபூபதி(கிராம நிர்வாக அலுவலர், கீழ்மாந்தூர்கிராமம்) | Religion :
Age : 33
Father's/Husband's Name :
Village :
Taluk :

<u>பி.சா.2</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்போது கீழ்மாந்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான் பணிபுரியும் கிராமத்தில் உள்ள சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்ற விவரம் எனக்கு நன்றாக தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பி.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.5 ஆவணங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் சான்று என்னால் வழங்கப்பட்டதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 13.02.2024 தேதியிட்ட சான்று மற்றும் அடங்கல் என்னால் வழங்கப்பட்டதுதான். ( மேற்படி சான்று மற்றும் அடங்கல் சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது). தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 30.09.2024 தேதியிட்ட சான்று மற்றும் அடங்கல் என்னால் வழங்கப்பட்டதுதான். ( மேற்படி சான்று மற்றும் அடங்கல் சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது). தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் 18.07.2024 தேதியிட்ட சான்று மற்றும் அடங்கல் என்னால்

வழங்கப்பட்டதுதான். ( மேற்படி சான்று மற்றும் அடங்கல் சா.சா.ஆ.5 மற்றும் சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது). தாவா சொத்து சம்மந்தமாக குத்தகை பதிவாளரிடமிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது. அதில் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த அனைத்து கணக்குகளுடன் ஆஜராக கோரப்பட்டுள்ளது. ஆர்.டி.ஆர் நீதிமன்றத்தில் தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது. ( மேற்படி குத்தகை உரிமை பதிவாளர் அனுப்பிய பதிவு உண்மை நகல் சா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் மேற்படி சான்றுகளை நேரடியாக சொத்துக்களை பார்வையிட்டுதான் கொடுத்தேன்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2025.02.25 16:40:40 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.